முருகப்பெருமான் துணை

**மகான் நின்றசீர்நெடுமாற நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.01.2022, சனிக்கிழமை

1. பரமானந்த சதாசிவ சூட்சுமம்
பாமரரும் அறிந்திட வேண்டி
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ சிலை திங்கள்
வரங்களென மூவையீர் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 17ம் நாள், 01.01.2022 சனிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை நின்றசீர்நெடுமாற நாயனாரும்
அருளுவேன் உலகநலம் காண
ஆசிதந்து ஞானம் அருளுகின்ற
ஆறுமுக அரங்கன் உபதேசம்
4. உபதேசம் காலனை வெல்லுகின்ற
உயர் ஞானம் வேதமாகும்
அபயமென அரங்கன் வழியில்
அகிலத்தார் சரணடைவு காண
5. காணவே வினைகள் அகலும்
கண்டம் பிணி ஆபத்து விலகி
தானாக குருவருள் பலமாக
தக்க சூட்சுமங்கள் விளங்கும்
6. விளங்கும் விடியலை நோக்கி
விடாது தொடரும் பூசைவழி
களங்கமற ஞான வழிதனில்
கந்தவேலன் காட்சிக் கிட்டும்
7. கிட்டுமே ஞானத்தலைவனே
குருவரங்கனாக வந்துள்ள
திட்டம் அவதார நோக்கமும்
தெளிவாக மாற்றம் காணும்
8. காணவே இந்த நன்னாளில்
கட்டாயம் பிரணவக் குடிலின்
ஞான வாசலை அடைந்துமே
ஞானதேசிகா முருகா என வேண்டி
9. வேண்டியே பக்குவம் தயவும்
வேலவன் அருளும் தந்து காப்பாயென
வேண்டியே சன்மார்க்கம் எனும்
வெற்றி வழிகளை நம்பிவர

10. வருகவே ஞான சித்தியும்
வல்லமையான மனபலமும்
தரும குணமும் தடை வெல்லும்
தனித்துவமும் கூடி இனிதே

11. இனிதே அரங்கன் அருள்பட
இவ்வுலகில் உலகோர் சிறப்பர்
துணிவுபட உயர் சேவை ஆற்றி
தேசிகன் வழி ஞானி ஆவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–